FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
Term Examination, March - 2018

தரம் :- 12 (2019)	வணிகக்கல்வி	புள்ளித்திட்டம்

பகுதி I

1) 4	6) 4	11) 2
2) 3	7) 2	12) 4
3) 1	8) 1	13) 3
4) 3	9) 5	14) 2
5) 2	10) 3	15) 4

(15X2=30 புள்ளிகள்)

16) அ) கொள்வனவாளர், விற்பனையாளர் (2X½ 1 புள்ளி)

ஆ) வியாபாரம், துணைச்சேவைகள் (2X½ 1 புள்ளி)

17) அ) இலத்திரனியல் வர்த்தகம் (1 புள்ளி)

agaram.lk

ஆ) ஒழுக்க முறைமை / ஒழுக்கவிழுமியக் கோவை (1 புள்ளி)

18) அ) அரச வருமானம், அரச செலவுகள் (2X½ 1 புள்ளி)

ஆ)

- தலைமைத்துவத்திறன்
- ஆளிடைத் தொடர்புத்திறன்
- தொடர்பாடல் திறன்
- அடிப்படை முகாமைத்துவத்திறன்

(1 விடைக்கு புள்ளி இல்லை
2 – 3 விடைக்கு ½ புள்ளி
4 விடைகளுக்கும் 1 புள்ளி)

19) அ) 1) பொருளாதார மற்றும் விலை மட்டங்களின் உறுதியினைப் பேணுதல்

2) நிதித்துறையின் உறுதியினைப் பேணல் (2X½ =1 புள்ளி)

ஆ) இலங்கை மத்திய வங்கி
உத்தரவு பெற்ற வணிகவங்கி
உத்தரவு பெற்ற விசேடவங்கி

(2X½ =1 புள்ளி)

20) 1. பிழை
2. சரி
3. பிழை
4. சரி

(4X½ = 2 புள்ளிகள்)

21) அ) 1. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்
2. வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல். (2X½ =1 புள்ளி)

ஆ) 1. தரமான பொருள்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு.
2. பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு
3. வணிகத்தின் நீண்டகால வாழ் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு. (2X½ =1 புள்ளி)

22) 1. வளப்பயன்பாடு
2. மூலப் பொருள்களும் கழிவுப்பொருள் முகாமைத்துவமும்
3. இடர் முகாமைத்துவம்
4. இயற்கையானதும் கலாசார வடிவமைப்புக்களும் (4X½ = 2 புள்ளிகள்)

23) 1. வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படல்
2. வியாபார கூட்டுக்கள் உருவாதல்
3. உலக அமைப்புக்கள்
4. சர்வதேச ரீதியாக சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்படல். (4X½ = 2 புள்ளிகள்)

agaram.lk

24) 1. வேலை வாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்.
2. வரி செலுத்தலைச் சரியாக மேற்கொள்ளல்.
3. கழிவுப்பொருள் முகாமைத்துவம்
4. சமூக நலன்புரிச்சேவை
5. சூழலை நேசிப்பவராக கருமமாற்றல் (4X½ = 2 புள்ளிகள்)

25) 1. குறுங்கால, நீண்டகாலக் கடன்கள்
2. நிதி ரீதியான கடன்கள்
3. வரிச்சலுகை
4. மீள் நிதியிடல் வசதிகள் (4X½ = 2 புள்ளிகள்)

பகுதி – II

01) i) 1) பண்டமாற்று :-

மிகை உற்பத்தியை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் பண்டமாற்று முறையாகும்.

2) பணப்பாவனை :-

பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக பணப்பாவனை அறிமுகமானது. ஆரம்பத்தில் சில பொருட்கள் பணமாக பயன்படுத்தப்பட்டன பின்னர் உலோகங்கள் பயன்படுத்தப்பட்டு தற்போது நாணயம், நாணயத்தாள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக வியாபாரம் வளர்ச்சியடையக் கூடியதாக உள்ளது.

3) கைத்தொழில் புரட்சி :-

கைத்தொழில் புரட்சியின் விளைவாக இது வரையில் காணப்பட்ட குடிசைக் கைத்தொழில் முறைமை மறைந்ததுடன் பாரிய தொழில்சாலை முறைமை தொடங்கியது. இதனால் உற்பத்தி அதிகரித்து இது வியாபாரத்தின் விரிவாக்கத்துக்கு ஏதுவாகக் காணப்பட்டது.

4) தகவல் பொருளாதாரம் :-

இலத்திரனியல் வர்த்தகம் இலத்திரனியல் வணிகம், இலத்திரனியல் தபால் இணையம், இலத்திரனியல் பணம் என்பவற்றின் அறிமுகம் காரணமாக இன்று வியாபாரத்துறையில் பல மாற்றங்களும் அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பிட 4 விடயம் 1 புள்ளி
விபரிக்க 4 விடயம் 1 புள்ளி

agaram.lk

ii. 1) சந்தையில் நிலைத்திருத்தல்
2) இலாபத்தை உச்சப்படுத்தல்
3) விற்பனையை உச்சப்படுத்தல்
4) சந்தைப் பங்கை அதிகரிக்கச் செய்தல்.
5) பங்குகளின் சந்தைப் பெறுமானத்தை உச்சப்படுத்தல்.
6) வணிகரின் தனிப்பட்ட திருப்தி.
7) சமூகத்தினதும் மக்களினதும் நலன்.

(4X½ = 2 புள்ளிகள்)

iii. 1) பேரளவு உற்பத்தி
2) இயந்திரமயமாக்கல் / புதிய இயந்திர முறை அறிமுகம்.
3) துணைச்சேவைகள் அபிவிருத்தியடைந்தமை
4) அதிக வேலை வாய்ப்புக்கள்.
5) தொழிற்சாலை முறைமை அறிமுகம்.
6) விவசாய பொருளாதார முறையிலிருந்து கைத்தொழில் முறைமைக்கு மாறியுள்ளது.
7) நகர மயமாக்கம்
8) சந்தை விரிவாக்கம் (தேறிய சர்வதேச)

(4X½ = 2 புள்ளிகள்)

iv. பிரிவினர்கள் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்.

1) உரிமையாளர்
- முதலீட்டினை அதிகரித்துக் கொள்வதற்கு
- வணிகத்தின் வாழ்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு.

2) ஊழியர்கள்
- ஊழியர்களின் செயற்றிறனை அதிகரித்துக் கொள்வதற்கு.
- ஊழியர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு
- ஊழியர் ஈர்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு

3) கடன் கொடுநர்கள்
- தொடர்ச்சியாகத் தேவையான நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு
- குறைந்த கிரயத்தில் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு.
- வரிச் சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கு.

4) அரசு
- வரிச்சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கு
- உட்கட்டமைப்பு வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கு.
- தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு.

5) வாடிக்கையாளர்கள்
- உரிய பொருள் சேவை தொடர்பில் சந்தைப் பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு.
- வாடிக்கையாளரின் நம்பிக்கையினைக் கட்டி யெழுப்புவதற்கு.
- வாடிக்கையாளர்களின் பக்கச்சார்பினை உருவாக்குவதற்கு.

குறிப்பிட 4 விடயம் 1 புள்ளி
விபரிக்க 4 விடயம் 1 புள்ளி

agaram.lk

v.

ஆதிகாலம்	தற்காலம்
1. பண்டங்களுக்குப் பதிலாகப் பண்டங்களைப் பரிமாறல்.	1. பரிமாறலுக்குப் பணம் பயன்படுத்தப்படுதல்.
2. நுகர்வுக்காக (நேரடி உற்பத்தி) உற்பத்தி செய்தல்	2. நுகர்வுக்கு மேலதிகமாக சந்தைப்படுத்தலுக்காகவும் உற்பத்தி செய்தல். (நேரில் உற்பத்தி)
3. வரையறுத்த அல்லது அடிப்படை தேவைகளை மட்டும் நிறைவு செய்தல்.	3. அடிப்படைத்தேவைகளுடன் மேலதிக வேறுபட்ட தேவைகளையும் நிறைவு செய்தல்.
4. போட்டியின்றி மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்தல்.	4. கடினமான போட்டியின் மத்தியில் தேவைகளை நிறைவு செய்தல்.

(4X½ = 2 புள்ளிகள்)

02) **i)**

நிறுவனக் கலாசாரத்தின் பலம்	**நிறுவனக் கலாசாரத்தின் பலவீனம்**
1. நேரான மதிப்பீடு மற்றும் நேரான முறைமையும் காணப்படல்.	1. நேர் மதிப்பீடும் நேரான் முறைமையும் காணப்படாமை.
2. அதற்கேயுரிய விருத்தியடைந்த நடத்தை மற்றும் பழக்க வழக்கங்கள் காணப்படல்.	2. உயர் மேற்பார்வை காணப்படாமை
(1 விடயம் 1 புள்ளி)	(1 விடயம் 1 புள்ளி)

ii. 1) அதிக இலாப எதிர்பார்புடன் தரத்தில் குறைத்து பொருள்களை இறக்குமதி செய்தல்.
2) கூடிய போட்டித்தன்மையான நிலைமைகளில் நுகர்வாளர்களை ஏமாற்றுதல்.
3) ஊழியர் நலனோம்பு தொடர்பில் கூடிய அக்கறை செலுத்தாமை.
4) இயற்கை வளங்களை வீணடிக்கக் கூடியவாறு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5) சூழலை மாசடையக்கூடியவாறு கழிவுப் பொருட்களை அகற்றல்.
6) எமது நாட்டின் சமூக, கலாசாரங்களுக்கு ஒவ்வாத வகையில் வியாபார விளம்பரங்களை மேற்கொள்ளல்.
7) சமூக கலாசாரத்திற்குப் பொருந்தாத வகையில் ஆடை வடிவமைப்புக்களை உருவாக்கல்.

(4X½ = 2 புள்ளிகள்)

iii. 1) இறக்குமதிப் பொருட்களுக்குச் சுங்கவரியினை அறவிடுவதன் மூலம் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் உள்நாட்டு உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். / உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்க முடியும்.

2) உள்நாட்டு உற்பத்திகளின் மீது வரிகள் அறவிடப்படுவதன் காரணமாக பொருள்கள் சேவைகளின் விலை அகரிக்கலாம்.

3) அரசு உட்கட்டமைப்பு வசதிகளுக்குச் செலவுகள் செய்வதனால் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள அது இலகுவாக அமையும்.

(2X1= 2 புள்ளிகள்)

iv. நுகர்வோருக்கு
1) செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானமுள்ள பொருள் கிடைப்பதற்கு நுகர்வோனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தல்.
2) சந்தை மோசடிகளிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்.
3) தரமான பொருள்கள் சேவைகளை நுகர்வு செய்வதன் காரணமாக நுகர்வோர் தேகாரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்.
4) தேவையான சந்தர்ப்பங்களின் போது நுகர்வோர் பாதுகாப்பிற்காகச் சட்டரீதியான பாதுகாப்புக் கிடைக்கப்பெறல்.
5) நுகர்வோர்களுக்கு வாழ்வதற்கான பொருத்தமான சூழல் நிலைமையொன்று ஏற்படல்.

(2X½ = 1 புள்ளி)

agaram.lk

வணிகருக்கு

1) தரத்துடன் கூடிய பொருட்களை வழங்குவதினூடாக நுகர்வோரின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
2) வணிகரின் விற்பனைப்புரள்வு அதிகரிப்பதனால் இலாபம் உயர்வடையும்.
3) நியமங்களுக்கமைய உற்பத்தி செய்வதன் காரணமாக வீண்விரயங்கள் குறைவடைதல்.
4) பாதகமான போட்டி முறைகேடான செயற்பாடுகள் அற்ற நிலையின் காரணமாக சாதகமான வணிகச் சூழலொன்று ஏற்படல்.

(2X½=1 புள்ளிகள்)

v. 1) இலகுவாக ஆரம்பிக்க முடிதல்.
2) சகல இலாபங்களும் உரிமையாளருக்குக் கிடைக்கப்பெறல்.
3) சுதந்திரமாக தீர்மானமெடுக்க முடிதல்.
4) காணப்படுகின்ற சட்டதிட்டங்களும் பிரமானங்களும் குறைவாக இருத்தல்.
5) வணிகத் தகவல்களின் இரகசியம் பாதுகாக்கப்படல்.
6) வணிகத்தை இலகுவாக கலைக்க முடிதல்.
7) வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்புகளை மேற்கொள்ள முடிதல்.
8) நிர்வாகம் இலகுவாயிருத்தல்.

(4X½ = 2 புள்ளிகள்)

03) i. அதன் உரிமையாளரின் பெயரிலன்றி வேறு பெயர்களில் நடாத்திச் செல்லப்படுமாயின்

முழுமையான விடைக்கு 1 புள்ளி

1918 ஆம் ஆண்டின் 6ம் இலக்க வியாபாரப் பெயர் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிய பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

முழுமையான விடைக்கு 1 புள்ளி

ii. 1) பங்காளர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை இருவராக இருப்பதுடன் உச்ச எல்லை 20 பேராக வரையறுக்கப்பட்டிருத்தல்.
2) ஏதேனுமொரு வணிகக் கருமமொன்றிருத்தல்.
3) பங்காளர்களிடையே ஒப்பந்தமொன்றிருத்தல் வேண்டும்.
4) இலாபப் பகிர்விற்கான ஏதோ ஒரு இணக்கப்பாடொன்றைக் காணக்கூடியதாக இருத்தல்.
5) எல்லாப் பங்காளர்களும் தனதும் ஏனைய பங்காளர்களினதும் பிரதிநிதியொருவராகவும் முதல்வராகவும் கருதுதல்.

(4X½ = 2 புள்ளிகள்)

iii. 1) எழுத்து மூல ஒப்பந்தம் ஒன்று இல்லாத போது.
2) எழுத்துமூல ஒப்பந்தத்தில் குறிப்பிடபடாத விபரம் தொடர்பில் பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பத்தில்.

(2X1= 2 புள்ளிகள்)

agaram.lk

iv.

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி	வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி
1) ஆகக்குறைந்தது – 01 ஆகக் கூடியது – 50	ஆகக்குறைந்தது – 01 உச்ச எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை
2) பகிரங்கமாப் பொது மக்களுக்குப் பங்குகளையோ அல்லது பிணைப் பத்திரங்களையோ வழங்க முடியாது.	பகிரங்கமாகப் பொது மக்களுக்குப் பங்குகளை அல்லது பிணைப் பத்திரங்களை வழங்க முடியும்.
3) இயக்குநர் சபையால் மேற் கொள்ளப்படும் ஆகக் குறைந்த இயக்குநர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.	இயக்குநர் சபையால் மேற்கொள்ளப்படும் ஆகக் குறைந்த இயக்குநர்களின் எண்ணிக்கை 02 ஆகும்.
4) கொள்வனவு செய்த பங்குகளின் பெறுமதிக்கு வரையறுக்கப் பட்டிருக்கும்.	கொள்வனவு செய்த பங்குகளின் பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.

(4X½ = 2 புள்ளிகள்)

v. 1) வியாபாரப் பெயர்பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்

உ+ம் :- பொதுவான பெயரினைக் கொண்டதாக இருந்தால்.

2) விசேட அனுமதி தேவைப்படுகையில் உரிய அதிகாரி அல்லது அமைச்சிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல்.

உ+ம் :- தொழிற்சாலை, சாரதி, பயிற்சி நிலையம்.

3) வணிக அமைப்புக்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான சட்டங்கள்.

உ+ம் :- நுகர்வோர் விவகார அதிகார சபைச்சட்டம், உணவுச்சட்டம்

4) தொழிலாளர்களுக்கு பிரயோகிக்கத்தக்க தொழிற்சட்டங்கள்.

agaram.lk

உ+ம் :- ஊழிய சேமலாப நிதிய சட்டம் ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டம் கடை காரியாலய சட்டம்.

(4X½= 2புள்ளிகள்)

04) i. 1) சுயாதீனமான திறந்த அங்கத்துவம்

2) ஜனநாயக ரீதியான அங்கத்துவ நிர்வாகம்.

3) அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு.

4) தன்னிச்சையான சுதந்திரம்.

5) கூட்டுறவுக்கல்வி, பயிற்சி, தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

6) பிரதேச, தேசிய, சர்வதேச ரீதியான கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு.

7) அங்கத்தவர் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

(4X½ = 2 புள்ளிகள்)

ii. 1) கூட்டுறவுச் சங்கங்கள் திறந்திருக்கும் நேரத்தை விரிவுபடுத்தல்.

2) கடனுக்கு பொருள் விற்பனை தொடர்பாக அவதானம் செலுத்துதல்.

3) முகாமைத்துவக் குழுவிற்காகத் திறமைமிக்க அனுபவம் கொண்ட வினைத்திறனுடைய குழுவினரைத் தெரிவு செய்தல்.

4) மேம்படுத்தல் உபாயமுறைகளைப் பயன்படுத்தல்.

5) தன்னியக்க சேவை கொண்ட விற்பனையகங்களை மேலும் விரிவுபடுத்தல்.

6) நுகர்வோர் ஈர்ப்பிற்காக விற்பனையகங்களை கவர்ச்சிகரமான முறையில் ஒழுங்கமைத்தல்.
7) அங்கத்தவர்களின் அனுகூலங்களை அதிகரிக்கச் செய்தல்.
8) புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்கல்.
9) நுகர்வோர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான புதிய தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தல்.

(4X½ = 2 புள்ளிகள்)

iii. **அங்கீகாரம் வழங்குபவர்**

1) அவரின் முதலீட்டின்றி வணிகத்தை விரிவுபடுத்தக்கூடிய ஆற்றல் கிடைத்தல்.
2) விளம்பரச் செலவுகளை அங்கீகாரம் பெறுபவருடன் பகிர்ந்து கொள்ள முடிதல்.
3) அங்கீகாரம் பெறுபவரின் முதலீட்டின் மூலம் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
4) அங்கீகாரம் பெறுபவரின் வினைத்திறனின் அடிப்படையில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
5) அங்கீகாரம் பெறுபவரின் மூலம் பயனடைதல்.

(2X½ = 1 புள்ளி)

அங்கீகாரம் பெறுபவர்

1) அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பின் கீழ் பாரிய சந்தையைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
2) தோல்வியடையக்கூடிய போக்கு குறைவாகக் காணப்படல்.
3) பிரசித்தி பெற்ற வியாபாரப் பெயர் காரணமாக விளம்பரம் செய்தல் இலகுவாக அமைதல்.
4) அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து முகாமைத்துவப் பயிற்சி கிடைக்கப்பெறல்.
5) மூலப்பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடிதல்.

(2X½ = 1 புள்ளி)

iv. அ) வெவ்வேறாக காணப்பட்ட இரு கம்பனிகள் அல்லது பல கம்பனிகள் தனி வணிகம் ஒன்றாக மாற்றம் அடைதல் ஒன்றிணைதல் எனப்படும்.

(01 புள்ளி)

ஆ) 1) உற்பத்தியையும் விற்பனையையும் கட்டுப்படுத்தல்.
2) உயர் விலையை பேணுதல்.
3) திட்டமிட்ட இலாபத்தைப் பெறல்

(2X½ = 01 புள்ளி)

v. 1) ஒன்றிணையும் கம்பனிகளில் ஒரு கம்பனி ஏனைய கம்பனிகளின் சொத்துக்கள் பொறுப்புக்களை கொள்வனவு செய்வதன் மூலம் (விலை கொடுத்து வாங்குதல்)

2) சேரும் இரு கம்பனிகளின் வணிகக் கருமங்களையும் முடிவுக்கு கொண்டு வந்து அந்தக்கம்பனிகளுக்கு பதிலாக புதிய கம்பனி ஒன்றை ஆரம்பித்தல்.

(2X1= 2புள்ளிகள்)

agaram.lk

05) i) 1) தனியார் துறையின் மூலம் பாதகமான முறையில் இலாபத்தை உழைத்தல் போன்ற சந்தை நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு

2) ஏகபோக நிறுவனங்கள் உருவாவதைத் தடுப்பதற்கு.

3) நாட்டின் பாதுகாப்புக்கருதி காணப்படுகின்ற பல்வேறு வணிகத்துறைகளை நடத்திச் செல்வதற்கு.

4) பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியமான பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு.

5) இலாபமற்ற தனியார்துறை ஈடுபடாத பாரியளவு கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை நடத்திச்செல்ல வேண்டி இருப்பது.

6) அரசின் திட்டத்துடனும் கட்டுப்பாட்டின் கீழும் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் வளங்கள் வீண்விரயமாவதை இழிவுபடுத்திக் கொள்வதற்கு.

(4X½ = 2 புள்ளிகள்)

ii. அ) 1) பட்டியல்படுத்தப்படாத கம்பனி

2) பங்குடைமை வணிகம்

3) அரச திணைக்களம்

4) அரச கூட்டுத்தாபனம்

நாலும் சரியாயின் 1 புள்ளி

ஆ) 1) பட்டியல்படுத்தப்படாத கம்பனி

2) இலங்கை மின்சாரசபை

(2X½ = 1 புள்ளி)

agaram.lk

iii. 1) புத்தாக்கம் புனைதல்

2) எண்ணக்கருக்களை உருவாக்கலும் வணிகத்திட்டத்தைத் தயாரித்தலும்.

3) தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளல்.

4) செயல்நிலைக்கு மாற்றுதல்

5) அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளல்.

(4X½ = 2 புள்ளிகள்)

iv. 1) இடர்களை ஏற்பதற்கான விருப்பம் :-

இடர்களை தவிர்த்துக் கொள்வதை விட அவ்விடர்களுக்கு முகங்கொடுப்பதற்கான விருப்பத்தைக் காட்டுவார். எனினும் எந்தவொரு இடர்களுக்கும் முகங்கொடுப்பது இதன் கருத்தல்ல.

2) ஆக்க ரீதியானது :-

வித்தியாசமான முறையில் காணுதல், எண்ணுதல், கருமமாற்றுதல்

3) அர்ப்பணிப்பு :-

தனது நோக்கம் நிறைவேறும் வரையில் தான் செய்யும் கருமங்களைக் கூடிய உற்சாகத்துடன் மேற்கொள்வார்.

4) தன்னம்பிக்கை :-
முயற்சியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதுடன் அவற்றிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து அப்பிரச்சினைகள் எதிர்வு கொள்ள முடியும் என்ற நம்பிக்கையே தன்னம்பிக்கையாகும்.

5) சுயாதீனமானது :-
ஏனையவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்காது தனது கருத்தினையும் திறனையும் முடியுமான வரையில் நடைமுறைப்படுத்துவதற்காக இருக்கும் விருப்பமாகும்.

குறிப்பிட 2X½=1 புள்ளி
விளக்க 2X½=1 புள்ளி

v. 1) நிதிப்பிரச்சினை
2) சந்தைப்போட்டி நிலைமைக்கு முகம் கொடுப்பதில் காணப்படும் சிரமம்.
3) முகாமைத்துவத்தின் பலவீனம்
4) முயற்சியாண்மைத் திறன் குறைவாகக் காணப்படல்.
5) உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானளவு காணப்படாமை.
6) புதிய தொழில்நுட்ப அறிவு குறைவாகக் காணப்படலும் புதிய தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்தாமையும்.

(4X½ = 2 புள்ளிகள்)

06) i. 1) வணிகத்தை ஆரம்பிப்பது இடர்களுடன் கூடியதொன்றாகும். எனினும் முயற்சியாளரிடம் காணப்படுகின்ற இடர் முகாமைத்துவம் செய்யக்கூடிய திறனினூடாக அதனை இழிவுபடுத்திக் கொள்ள முடியும்.
2) முயற்சியாளரின் அர்ப்பணிப்பு ஈடுபாடு என்பவற்றின் அடிப்படையில் பெரும்பாலும் வணிகங்கள் வெற்றியடையும்.
3) முயற்சியாளரினுள் காணப்படுகின்ற தன்னம்பிக்கை ஊக்கம் என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் வெற்றியில் தாக்கம் செலுத்தும்.
4) முயற்சியாளரினுள் காணப்படுகின்ற முயற்சியாண்மைத் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வணிகங்களை வெற்றியடையச் செய்ய முடியும்.

(4X½ = 2 புள்ளிகள்)

ii. 1) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தல்.
2) நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
3) போலிகளை உருவாக்குவது கடினமாயிருத்தல்.
4) இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்.
5) இலகுவாக இனங்காணக்கூடியதாக ஓரினத்தன்மை கொண்டிருத்தல்.
6) சிறிய அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.

(4X½ = 2 புள்ளிகள்)

iii. 1) வங்கித்துறை
2) வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்.
3) விசேட நிதி நிறுவனங்கள்
4) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

(4X½ = 2 புள்ளிகள்)

agaram.lk

iv. 1) கூடிய பெறுமானம் கொண்ட சொத்துக்களை முழுத்தொகையையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.

2) குத்தகைக்காகச் செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருத்தல்.

3) இயந்திரம் காலம் கடந்தவையாக மாறும் பொழுது ஏற்படுகின்ற நட்டத்தையும் மூலதன நட்டங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

4) பாரியளவு தொகையை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்ட முடிதல்.

5) வணிகத்தின் நிதி நிலைமை கூற்றில் பொறுப்பொன்றாக காட்டப்படமாட்டாது.

(4X½ = 2 புள்ளிகள்)

v. 1) நாணயக்கொள்கை / பணக்கொள்கையினை நெறிப்படுத்தல்.

2) வெளிநாட்டு நாணய மாற்றுக் கொள்கையினை நெறிப்படுத்தல்.

3) இலங்கையின் சட்ட ரீதியான வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவம்.

4) சட்டப்பணத்தினை வெளியிடலும் வழங்கலும்.

5) வங்கி, வங்கியல்வாத நிறுவனங்களின் மேற்பார்வையாளராகத் தொழிற்படல்.

6) அரசின் பொருளாதார ஆலோசகராகவும், வங்கியாளராகவும், நிதிப்பிரதிநிதியாகவும் தொழிற்படல்.

7) மத்திய வங்கியில் தீர்ப்பனவுக்கணக்குகளைப் பேணிச்செல்லும் வணிக வங்கிகளுக்கும், ஆரம்ப வணிகங்களுக்கும் தீர்ப்பனவு மற்றும் தீர்வக வசதிகளை வழங்குதல்.

(4X½ = 2 புள்ளிகள்)

agaram.lk